முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1447

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.09.2023, வெள்ளிக்கிழமை

1. மகா யோகியே அரங்கா வாழ்க
மாதவசியே தேசிகா வாழ்க
யுகமாற்றம் செய்யவந்த
நல் உயர் குருவே குரு அரங்கனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 29 ம் நாள், 15.09.2023, வெள்ளிக்கிழமை)
வையகம் காத்திடும் மாதவசி நீ ஊழ் போக்கி உலகோர் துன்பம் விரட்டி
உத்தமனாய் உலகோரை மாற்ற வந்த உயர் ஞானி நீயப்பா
3. அப்பனே உன் சக்தி பெருக
ஆறுமுகன் யான் காப்பாக
நித்தம் நித்தம் உந்தனுக்கு
கருணைகொண்டு அருளி வருகின்றேன்
4. வருகவே என் தொடர்பாலும்
வல்லமைமிக்க என் அவதாரத்தாலும் நீ
தர்மனாய் தவசியாய் தன்னார்வ தொண்டர்களை உருவாக்கி இனிதே
தரணியைக் காக்கும் உயர் பொறுப்பில் உள்ளாய்
5. உள்ளபடி உன் அவதாரம் வெற்றிகொள்ளும்
உந்தனுக்கு சர்வபலமும் தந்து
ஆறுமுகன் யான் உலகோர்க்கு
உன்கரம்பட சக்தியாக யானே இயங்கி வருகின்றேன்
6. வருகவே உன் தீட்சை மகத்தானது
வல்லமையான உன் தர்மம் உயர்வானது
தருகின்ற குணத்தை மக்களுக்கு தரும்
தயாபரன் நீயாக இருக்க

7. இருக்கவே உன் கரம்பட
இனிதே தீட்சை பெறுபவரெல்லாம்
தர்மவானாய் இந்த தரணியை வெல்லும்
தவசியாய் ஞானியாய் ஆற்றல் பெருக்கம் கண்டு

8. அகிலத்தில் அற்புதம் நடத்துவரப்பா
அரங்கனே கலியை வெல்ல வந்த மாதவசி நீ
ஆற்றலோடு உன் தொடர்பில் இருந்துவந்தால் போதும்
அனைவருக்கும் இனி பிறவாத பெரும்பேறு இலகுவாய் சித்திக்கும்

9. சித்திமிகு அரங்கன் நீ
சித்தி தரும் ஞானியரும் நீ
உத்தமமாக உன் வழி உலகோர் நம்பகம் கொண்டு வந்தால் போதும்
இந்த பேருலகமே ஞானலோக மாற்றம் அடையக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–